# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

## அ.சா.3 (LW3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சுப்பிரமணி** | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | **முத்துவாடன்** | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **08.02.2022** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கால்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கோட்டூர்புரத்தில் தற்போது கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 26.09.2016ம் ஆண்டு சங்கால்பட்டியில் கிராம உதவியாளாக பணிபுரிந்த போது என்னுடன் பணியில் இருந்த மற்றொறு கிராம உதவியாளர் குருசாமி மகன் கருப்பையா என்பவரும் காலை 6 மணியளவில் நாங்கள் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது சங்கால்பட்டி கோட்டூர் கிராமம் மைக்கேல் பாளையம் சிமிண்ட் ஓடையில் வடக்கு பக்கம் ஒரு ஆண் பிரேதம் கிடந்ததை பார்த்தோம். அந்த பிரேதம் சிவப்பு கலர் சட்டையும் புளு கலர் ஜீன்ஸ்சும் அணிந்திருந்தது. அந்த ஆண் பிரேதத்தில் வலது கண்ணில் காயமும், தலையில் பின்பகுதியில் காயம் இருந்தது. உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயமும் இருந்தது. காலில் பெருவிரலில் காயம் காணப்பட்டது. உடனே கிராம நிர்வாக அலுவலருக்கு தொலை பேசியின் மூலம் தகவல் தெரிவித்தோம். கிராம நிர்வாக அதிகாரி புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேதம் கிடந்த இடத்திற்கும் எங்கள்அலுவலகத்திற்கும் இடையே சமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். பிரேதம் இருக்கும் விபரத்தை கிராம நிர்வாக அதிகாரிடம் கருப்பையா தெரிவித்தார். கிராம நிர்வாக அதிகாரி காலை 7 மணியளவில் சடலம் கிடக்கும் இடத்தை பார்த்தார். கிராம நிர்வாக அதிகாரி சடலம் இருந்த இடத்தில் வைத்து புகார் எழுதினார். நான் சொன்னபடி சொன்ன விதத்தில் சங்கால்பட்டியில் பிரேதத்தை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**நான் கிராம உதவியார் என்பதாலும், அசா.1 கிராமநிர்வாக அதிகாரி என்பதாலும் போலீஸ் சார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.08 18:36:30 +0530

Additional District Judge,

Dindigul.